Ride a bicycle safely




## சாலைப் பாதுகாப்புத் தகவல்கள்

**உங்கள் குழந்தைகள் பள்ளியிலிருந்து போக, வரப் பயணிக்கும்போது அவர்களின் பாதுகாப்புக்கு நீங்கள்தான் பொறுப்பாவீர்கள்.**

# மிதிவண்டியைப் பாதுகாப்பாக ஓட்டவும்

இளம் பிள்ளைகள் தனியாக வாகனத்தை ஓட்டுவதற்குத் தேவையான திறன்களை இன்னும் வளர்த்துக் கொண்டிருப்பதால், மிதிவண்டிகள் (bikes), மோட்டார் வண்டிகள் (scooters) மற்றும் சறுக்குப் பலகைகள் (skateboards) இவற்றில் பயணிப்பதற்கு வேலியிடப்பட்ட பகுதிகள்தாம் பாதுகாப்பான இடமாகும்.

குழந்தைகள் குறைந்தபட்சம் 10 வயது வரை வாகனங்கள் மற்றும் ஊர்திப்பாதைகளை (driveways) தவிர்த்து பயணிக்க வேண்டும். அவர்கள் வண்டியோட்டப் பழகிக் கொண்டிருக்கும்போது, அவர்களோடு இணையாக பயணித்துக் கொண்டோ அல்லது நடந்து கொண்டோ பாதுகாப்பான மிதிவண்டிப் பயணியாக எவ்வாறு இருப்பது என்பதைப் பற்றி பேசுவது அவசியமாகும்.

10 வயதிலிருந்து 12 வயதுக்கு இடைப்பட்ட குழந்தைகள் போக்குவரத்து நெரிசலான சாலைகளில் பயணிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

மிதிவண்டியில் பயணிப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்ற அடையாளப் பலகைகள் இல்லாதிருக்கும் பட்சத்தில், வயதுவந்தோர் உடன்வந்து பயணித்துக் கண்காணிக்கின்ற 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் நடைபாதையில் சவாரி செய்யலாம்.

**பின்வருவனவற்றை எப்போதும் பின்பற்றுவதன் மூலம் பாதுகாப்பான மிதிவண்டிப் பயணியராக இருக்க உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கவும்:**

- பின்வருவன உள்ளிட்ட மிதிவண்டி சாலை விதிகளைப் பின்பற்றவும்:
  - நடைபாதையின் இடதுபுறமாகப் பயணிக்கவும்
  - நடைபாதைகளில் பாதசாரிகளுக்கு வழிவிடவும்
  - ஊர்திப்பாதைகளில் நுழையும்போதும், வெளியேறும்போதும் மோட்டார் வாகனங்களைக் கவனித்துச் செல்லவும்
- சரியாகப் பொருத்தப்பட்ட, மிதிவண்டிக்கான தலைக்கவசத்தை அணியவும் – அதுதான் சட்டம்
- மேல்சட்டை (vest) போன்று ஒளிரும் வண்ணம் கொண்ட ஆடைகளை அணியவும். அப்போதுதான் சாலையில் பயணிப்போர் அவர்களைக் காண முடியும்.

**மேலதிக உதவிக்கு**

பின்வரும் இணையத்திலுள்ள திணைக்களத்தின் சாலைப் பாதுகாப்புக் கல்வித்திட்டத்துக்குச் செல்லவும்: https://education.nsw.gov.au/road-safety-education அல்லது பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும் https://education.nsw.gov.au அதன்பின் சாலைப் பாதுகாப்புக் கல்வியைத் தேடவும்.

**மூத்த குழந்தைகள் தாமாகப் பயணிக்கும்போது அவர்களது பயணத் திறமையைக் கண்டறிந்து கொள்ளப் பின்வருவனவற்றை நீங்கள் கவனமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்:**

- பயணம் செய்யும் பாதை எவ்வளவு பாதுகாப்பானது?
- அவர்களுடைய ஓட்டும் திறன்கள் எப்படிப்பட்டவை?
- பயணப்படும் சூழலில் சுற்றுப்புறங்களைப் பற்றி அவர்களுக்கு எந்த அளவுக்குத் தெரியும்?
- எதிர்பாராத ஆபத்துகளை எந்த அளவுக்கு அவர்களால் சமாளிக்க முடியும்?

மாணவர்கள் பள்ளி மைதானத்துக்கு மிதிவண்டிகளைக் கொண்டுவருவதைப் பற்றி உங்கள் பள்ளியில் விதிமுறைகள் இருக்கும். உங்கள் குழந்தைகள் இவற்றை எல்லா நேரங்களிலும் பின்பற்றுகிறார்களா என்பதை உறுதி செய்து கொள்ளவும்.

